இனி இது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விழியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 03 செவ்வாய்க்கிழமை 19.11.2019 கதிர் 14

முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தம்மை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிய முறைமை தவறு எனத் தெரிவித்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், பக்கம் 02

# என்னுடன் இணைந்து பணியாற்ற சிறுபான்மை மக்களே வாருங்கள்!

## பதவியேற்பு வைபவத்தில் கோட்டா பகிரங்க அழைப்பு



கொழும்பு, நவ. 19

"எனக்கு வாக்குகளை வழங்கிய சிங்கள மக்களுக்கு நன்றி. சிங்கள வாக்குகளில் வெற்றி பெறுவேன் என்பது எனக்குத் தெரியும். எனது வெற்றியில் சிறுபான்மை மக்களையும் பங்குதாரர்களாக இருக்குமாறு கேட்டேன். எதிர்பார்த்த முடிவு கிடைக்கவில்லை. மீண்டும் ஜனாதிபதியாகக் கேட்கிறேன், என்னுடன் இணைந்து பணியாற்றுங்கள்."

– இவ்வாறு நேற்று தனது பதவியேற்பு வைபவத்தில் பகிரங்க அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. பக்கம் 03

## அரசியல் தீர்வு குறித்து கோட்டாபய 'கப்சிப்'!

கொழும்பு, நவ. 19

நாட்டின் ஜனாதிபதியாக நேற்றுப் பதவியேற்ற பின்னர் நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றிய கன்னி உரையில் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் எதுவுமே பக்கம் 03

## ஐ.தே.க. அமைப்பாளர் மீது வவுனியாவில் தாக்குதல்!

வவுனியா, நவ. 19

வவுனியா மாவட்ட ஐ.தே.க. அமைப்பாளர் பி.ஏ.கருணாதாச மீது இனந்தெரியாத நபர்கள் நேற்று மாலை தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். பக்கம் 02

## ஜனாதிபதியின் செயலராக பீ. பி. ஜயசுந்தர நியமனம்!



கொழும்பு, நவ. 19

முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி ஜயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பக்கம் 03

## அன்னம் அலுவலகம் மீது தாக்குதல் மொட்டு ஆதரவாளர்கள் 6 பேர் கைது

கொழும்பு, நவ. 19

கட்டுநாயக்க, வல்பொல – அடிஅம்பலம பகுதியிலுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பக்கம் 02

## பாதுகாப்புச் செயலாளராக கமால் குணரத்ன நியமனம்



கொழும்பு, நவ. 19

இறுதிக்கட்டப்போரில்போர்க்குற்றங்களை இழைத்தார் என்றகுற்றச்சாட்டுக்குஇலக்கான மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, பாதுகாப்பு அமைச்சின் புதிய பக்கம் 02

## மாவீரர்களை நினைவு கூர்வதற்கு தடை வரின் உடைத்தெறிவோம்!



### சிவாஜிலிங்கம் அதிரடி அறிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 19

மாவீரர் தினத்தில் அரசு இடையூறுகளை, தடைகளை ஏற்படுத்த முற்பட்டால் தடைகள் உடைத்தெறியப்படும்.

– இவ்வாறு தெரி பக்கம் 03

## சம்பிக்க உள்ளிட்ட மேலும் இருவர் அமைச்சுப் பதவிகளைத் துறந்தனர்



கொழும்பு, நவ. 19

ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தோல்வியடைந்தமையை அடுத்து, நேற்றும் அமைச்சர்கள் பதவி விலகல் பக்கம் 03

## ஐரோப்பிய ஒன்றியம் கோட்டாவுக்கு வாழ்த்து

### சர்வதேச நியமங்களை பின்பற்றி நடக்குமாறும் வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 19

புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்தைத் தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நியமங்களைப் பக்கம் 03

## தமிழர் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண கோட்டாவுக்கு சிவாஜி 100 நாள் அவகாசம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 19

ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள கோட்டாபாயவுக்கு நூறு நாள்கள் நாம் அவகாசம் வழங்குகின்றோம். நூறாவது நாள் முடிவதற்குள் தமிழர் இனப் பிரச்சினைக்கு தீர்வுக்கான உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். பக்கம் 03

## ரணகளமாகியது ஐ.தே.க. கூட்டம்!

### எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சஜித்துக்கு வழங்கக் கோரிக்கை

கொழும்பு, நவ. 19

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடியபோது பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. ரணில் பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கட்சித் தலை பக்கம் 03

## கோட்டாவைச் சந்தித்த பின்னர் ராஜினாமாச் செய்வார் ரணில்!

கொழும்பு, நவ. 19

தற்போதைய அரசியல்நிலைமைகள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் பதவியை இராஜினாமா பக்கம் 03

## எட்டியந்தோட்டையின் தமிழ் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து சிலர் அட்டூழியம்!

### யாருக்கு வாக்களித்தீர்கள் எனக் கேட்டு மிரட்டல்





கொழும்பு, நவ. 19

கேகாலை, எட்டியந்தோட்டைப்பிரதேசத்தில் வீடுகளுக்குள் புகுந்த கும்பல் ஒன்று யாருக்கு வாக்களித்தீர்கள்? என்று கேட்டுவிட்டு அட்டூழியத்தில் ஈடுபட்டது என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரி பக்கம் 03

## ஜனாதிபதி கோட்டா இன்று கடமையேற்பு!

கொழும்பு, நவ. 19

இலங்கையின் 7ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட கோட்டாபய ராஜபக்ஷ, பக்கம் 02

## கச்சேரிக்குள் மைத்திரி, ரணில் படங்களை அகற்றியவர் கைது!

மட்டக்களப்பு, நவ. 19

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரச அதிபரின் அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து சுவரில் தொங்க விடப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமர், உள் பக்கம் 03

## அரசைப் பதவி விலக கோருகிறார் மஹிந்த

கொழும்பு,நவ.18

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புக்குத்தலைவணங்கி அதனடிப்படையில் தற்போதைய பக்கம் 03

# கோட்டாபயவின் தெரிவு பெரும் ஏமாற்றம் கனடா எம்.பி. கரி ஆனந்தசங்கரி கருத்து



ஸ்காபுரோ,நவ.19

இலங்கையின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டமையை அறிந்து தாம் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளார் எனக் கனடா ஆளும் லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கை ஒன்றின் ஊடாக அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ, அவரது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றைச் செய்தவர்களாவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆயுதப்படைகள் செய்த போர்க்குற்றங்களுக்கு உத்தரவிட்டவர்கள் இவர்களே. ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றமை நல்லிணக்கத்திற்கான எந்தவொரு முயற்சியையும் நீர்த்துப் போகவே செய்யும். மேலும் இது ஒட்டு மொத்தமாக நாட்டை மேலும் இழிவுபடுத்துகிறது.

முடிவுகள் பெரும்பான்மை சிங்கள வாக்காளர்களின் பிரதிபலிப்பாகும். சிறுபான்மை தமிழ் மக்களிடம் இந்த அரசு மோசமாக தோல்வியடைந்துள்ளதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

அனைத்து சமூகங்களையும் பாதுகாக்கவும், அவர்களை அரசியலுக்குள் சம குடிமக்களாக இணைக்கவும் இந்தத் தேர்தல் முடிவு எந்தளவுக்கு உதவும் எனத் தெரியவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கில் தேர்தல் முடிவுகள் தமிழர்களுக்கு அவர்களின் விவகாரங்களில் சுயநிர்ணய உரிமை வழங்கப்படுவதை உறுதிசெய்வதன் அவசியத்தை தீவிரமாக வலியுறுத்துகின்றன. தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையே அவர்களைப் பாதுகாக்கும். அத்துடன், அவர்களின் நிலம், மொழி, கலாசாரத்தையும் பாதுகாக்க சுயநிர்ணய உரிமை அவசியம் என்பதை தேர்தல் முடிவு காட்டுகிறது எனவும் ஹரி ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டியுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு வருவது தீவில் குற்றமிழைத்தோருக்கு தண்டனையில் இருந்து விதிவிலக்களிக்கும் கலாசாரத்தை வெளிப்படுத்துகிறது. தற்போதைய உலக ஒழுங்கால் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை விலக்கும் அவர்களுக்கு உற்சாகமூட்டியுள்ளது. இந்தத் தேர்தலில் ராஜபக்ஷக்கள் வெற்றி பெற்றுள்ளபோதிலும் சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய அவசியம் நீடிக்கும். பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள் நீதி கிடைத்தே தீரும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புதிய அரசு நிர்வாகத்தின் மாற்றத்தால் இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்க போராடியவர்கள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், சிவில் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியாளர்கள், நீதிபதிகள் ஆகியோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவர்களுடன் துணையிருப்போம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கனடாவிலும், உலகெங்கிலும் உள்ள ஏனைய மனித உரிமை ஆர்வலர்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்காக நானும் தொடர்ந்து குரல் கொடுப்பேன் – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை கடமைகளை அதிகாரபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளார்.

இதற்கான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் சர்வமத வழிபாட்டுடன் நடைபெறவுள்ளது. (ஐ)

## அன்னம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் தொடர்பில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த 6 ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும் கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் கார், மோட்டார் சைக்கிள் இரண்டில் வருகை தந்தே, இந்தத் தாக்குதலை முன்னெடுத்துள்ளனரென்றும், இந்தத் தாக்குதலால் அந்த வீட்டு உரிமையாளரும் அவரது மனைவியும் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென்றும் பொலிஸார் கூறினர். (ஐ)

# நாடாளுமன்றத் தேர்தல்தான் அடுத்தது என்கிறார் மஹிந்தர்

ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியுடன் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதே சிறந்தது என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாரஹென்பிட்டவில் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் நிகழ்வு நேற்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்ட அவர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அனைவரும் மக்களின் கருத்தை மதிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் நாட்டில் அடுத்து நிகழ வேண்டிய முக்கியமான விடயமென்றால் அது நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(இந்த நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த மற்றொரு கருத்து முதலாம் பக்கத்தில்)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது காயமடைந்த அவர் வவுனியா பொது வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து வெற்றி பெற்ற பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக வெற்றிக்கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒரு குழுவினர் ஐ.தே.க. அமைப்பாளர் கருணாதாஸவின் வீட்டின் முன்னால் வெடி கொழுத்தி ஆரவாரத்தில் ஈடுபட்டமையுடன் வீட்டிலிருந்து வெளியே வந்த அமைப்பாளர் மீதும் தாக்குதல் மேற்கொண்டனராம்.

சிகிச்சை பெற்றுவரும் பி.ஏ. கருணாதாஸ இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ-100)

## பாதுகாப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் வழங்கப்பட்ட முதல் நியமனம் இதுவாகும்.

இறுதிக்கட்டப் போரில், மேஜர் ஜெனரல் குணரத்ன 53 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியிருந்தார்.

இந்தப் படைப்பிரிவினால் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கு இவரே பொறுப்பானவர் என்று குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தார்.

கஜபா படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் குணரத்ன, 2001 ஆம் ஆண்டுக்கும், 2010ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், 523, 551 ஆவது பிரிகேட்களினதும், வான்வழித் தாக்குதல் படைப்பிரிவினதும் கட்டளை அதிகாரியாக பணியாற்றியவர். பின்னர் 55ஆவது, 53ஆவது டிவிசன்களின் கட்டளை அதிகாரியாக இருந்தார்.

35 ஆண்டுகள் இலங்கை இராணுவத்தில் பணியாற்றிய அனுபவமுள்ள மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார்.

இதனிடையே இவர் எழுதிய, 'நந்திக்கடலுக்கான பாதை' நூல் சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமானது. அதில் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உறுதி – நடத்தையை வெகுவாகப் பாராட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் மாகாண அமைச்சர்கள் அனந்தி சசிதரன், கே.சிவநேசன் ஆகியோருக்கு எதிராகத் தாக்குதல் செய்த வழக்கையொட்டி இந்த மூவருக்கும் எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றையும் தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் உட்பட எதிர்மனுதாரர்களுக்குக் காலைச் சுற்றிய பாம்பு என்று குறிப்பிட்டிருந்தேன்.

காலைச் சுற்றிய பாம்பு விடுவதாயில்லை. நேற்றும் அதன் இழுபறி தொடர்ந்தது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் மஹிந்த சமயவர்த்தன, பிரியந்த பெரேரா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரரான டெனீஸ்வரனும், எதிர்மனுதாரர்களான நீதியரசர் விக்னேஸ்வரன், சிவநேசன் ஆகியோரும் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகினர். அனந்தி சசிதரன் வரவில்லை. அவருக்கு சுகவீனம் எனத் தெரிவிக்கப்பட்டு மருத்துவச் சான்றிதழ் ஒப்படைக்கப்பட்டது. அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

நேற்றைய விசாரணைகளின் போது எதிர்மனுதாரர் விக்னேஸ்வரனின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் இரண்டு விடயங்களை ஒட்டி பூர்வாங்க ஆட்சேபனையைக் கிளப்பி சுமார் இரண்டு மணி நேரம் வாதிட்டார்.

அவற்றை எல்லாம் செவிமடுத்த நீதியரசர்கள் இறுதியில் அவற்றை நிராகரித்து உத்தரவு வழங்கினர்.

பின்னர் எதிர்மனுதாரர்களிடம் குற்றப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. நீதிமன்ற அவமதிப்புக் குற்றச் சாட்டில் நீங்கள் குற்றவாளியா, சுத்தவாளியா என்று கேட்கப்பட்டது.

நீதியரசர் விக்னேஸ்வரனும், சிவநேசனும் எழுந்து தாம் சுத்தவாளி எனத் தெரிவித்தனர். அனந்தி சசிதரனின் நிலைப்பாடும் அதுவே என அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கை ஜனவரி 28 மற்றும் 31ஆம் திகதிகளில் விசாரித்து முடிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் திகதி நிர்ணயித்தது.

இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற்காக நேற்று மன்றுக்கு வந்திருந்த வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சபையின் செயலாளர் ஆகிய மூவரையும் வழக்குத் தொடர்பாக அவர்கள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களின் பிரதிகளை மனுதாரர் தரப்புக்கு வழங்கும்படியும் –

எதிர்வரும் ஜனவரி 28 மற்றும் 31ஆம் திகதிகளில் விசாரணைகளுக்குச் சமுகம் தரும்படியும் – நீதிமன்று உத்தரவிட்டது.

டெனீஸ்வரன் தொடுத்த மூல வழக்கில் டெனீஸ்வரனை மீண்டும் அமைச்சர் பதவியில் தொடர அனுமதிக்கும்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்த மறுத்தமை மூலம் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையை எதிர்மனுதாரர்கள் மூவரும் இழைத்துள்ளனர் என்பதே இந்த நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பிரதான விடயமாகும்.

நீதிமன்றத்தின் மேற்படி இடைக்கால உத்தரவைத் தாம் நடைமுறைப்படுத்த மாட்டார் எனத் தெரிவித்து அப்போதைய முதமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையில் ஆற்றிய உரையின் பிரதி உட்பட பல விடயங்கள் மனுதாரர் தரப்பினால் சான்றாதாரங்களாக நீதிமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ளன.

குற்றப்பத்திரத்தை ஏற்றுக்கொண்டு குற்றவாளியா? சுத்தவாளியா? என்ற கேள்விக்கு நேற்றுப் பதில் அளித்த போது, இந்த வழக்குக் காலைச் சுற்றிய பாம்பா, இல்லையா என்ற எனது கேள்விக்கு எதிர்மனுதாரர்களின் மனதில் சரியான பதில் கிட்டியிருக்கும் என நம்புகிறேன்.

காலைச் சுற்றிய பாம்பைக் கொத்தவிடாமல் காலில் இருந்து 'நைஸாக' அகற்றுவது பக்குவமாகச் செய்யப்பட வேண்டியது. இந்த விடயத்தைப் பக்குவமாக அணுகும்போக்குக் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதுதான் எனது மன ஆதங்கம்!

– மின்னல்–


# மரண அறிவித்தல்



## பசுபதி தங்கராணி

அராலி வடக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி தங்கராணி நேற்று (18.11.2019) மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்ற வைத்தி – அன்னம் தம்பதிகளின் அன்பு மகளும், காலம்சென்ற மாணிக்கம் – ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், பசுபதியின் அன்பு மனைவியும், சோபனா, சசிரேகா, பிரசா, தர்சிகா, லோசனா ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகேஸ்வரன், நிரோஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அர்வின், ஆத்விக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலம்சென்ற கந்தையா, வள்ளியம்மை மற்றும் தறுமு, இராசகிளி, இரத்தினம், சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம்சென்ற தெய்வேந்திரம் மற்றும் நல்லம்மா, மலர், நேசமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**175, அரசடி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.** **தகவல்:-குடும்பத்தினர்.**

## என்னுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னர் ஆட்சிக்கு பெயர்போன பௌத்தர்களின் புனித பூமியாக கருதப்படும் அநுராதபுரம் ருவன்வெலிமகாசாய பௌத்த விஹாரை வளாகத்தில் நேற்று முற்பகல் 11.48 மணிக்கு நாட்டின் 7ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இதன் பின்னர் நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்த மக்களுக்கு இந்த நேரத்தில் நன்றிகூறக்கடமைப்பட்டுள்ளேன். சிங்கள மக்களின் வாக்குகளால் மாத்திரமே நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இந்த வெற்றியில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களும் பங்குதாரர்களாக வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தேன். ஆனால் நினைத்தது போன்று எமக்கு அவர்களின் ஆதரவு கிடைக்கவில்லை.

எனினும் நாட்டின் ஜனாதிபதியாக முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களிடம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகின்றேன். நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல தமிழ், முஸ்லிம் மக்கள் எம்முடன் கைகோர்க்க வேண்டும்.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்த விடயங்கள் உட்பட தேர்தல் வாக்குறுதிகளை குறுகிய காலத்தில் நிறைவேற்றுவேன்.

எனது வெற்றிக்காகக் கடுமையாக உழைத்த எதிர்க்கட்சித் தலைவரும் கட்சியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் என்பதோடு அவருக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கட்சியை உருவாக்கி இந்நிலைக்குக் கொண்டுசென்ற கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கு நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன்.

எனது வெற்றிக்காக கைகோர்த்த அனைத்து கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் என அனைவருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் நான் பாதுகாப்பேன். பயங்கரவாதம், தீவிரவாதத்துக்கு எனது ஆட்சியில் இடமில்லை. பாதுகாப்பு அமைச்சராக நானே செயற்படுவேன். நிறைவேற்று அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்துவேன்.

எனது ஆட்சியின் கீழ் எந்தவொரு ஊழல், மோசடி குற்றச் செயல்கள், பெண்களுக்கு எதிரானவன்கொடுமைகள், போதைப் பொருள் கடத்தல்கள், பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் எதுவும் இடம்பெற இடமளிக்கமாட்டேன்.

நான் எனது நாட்டை அன்பு செய்கின்றேன். அதனால் எனது ஆட்சியின் எந்தவொரு ஊழல், மோசடிகளும் இடம்பெற‌ா. – என்றார். (ஐ)

## அரசைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு பதவி விலக வேண்டும் எனக் கோரியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று அவரது பிறந்தநாளை ஒட்டி கொழும்பு அபேராம விஹாரையில் நடைபெற்ற நிகழ்வில் பங்குபற்றிய பின்னர் ஊடகவியலாளரிடம் உரையாடிய போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ள நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மஹிந்த ஆட்சிக் காலத்தில் திறைசேரியின் செயலாளராக இருந்த பீ.பி.ஜயசுந்தர, மஹிந்த சிந்தனை திட்டத்தின் மூளையாக இருந்தார்.

மஹிந்த ஆட்சியில் நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய பீ.பி. ஜயசுந்தர, ஆட்சி மாற்றத்தின் பின் பெரும் நிதி மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய பதவியேற்ற பின் அரச உயர் பதவியான ஜனாதிபதியின் செயலாளராக கலாநிதி பீ.பி.ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

## ரணகளமாகியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் பதவியையும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் சஜித்துக்கு வழங்க வேண்டுமென சஜித் ஆதரவு எம்.பிக்கள் தர்க்கம் செய்தமையையடுத்தே இந்த அமளிதுமளி ஏற்பட்டது.

சுஜீவ சேனசிங்க, கபீர் காசிம் உட்பட்ட எம்.பிக்கள் இவ்வாறு போர்க்கொடி தூக்கியமையுடன், 25 வருடகாலம் இந்தப் பதவிகளை வகித்துவரும் ரணிலால் நிலையான ஆட்சியொன்றை ஏற்படுத்த முடியாமல் போனதாகக் குற்றஞ்சாட்டினர்.

ஆனால் ரணிலுக்கு ஆதரவாக சரத் பொன்சேகா, ராஜித, தயா கமகே, விஜிதமுனி சொய்சா ஆகியோர் பேசியமையால் கடும் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

இங்கு கடுந்தொனியில் பேசிய ரணில் –

நான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேசிய பின்னர் தேர்தல் தொடர்பில் ஒரு முடிவை எடுப்பேன்.

நான் இங்கு கதைக்கத் தொடங்கினால் பலவிடயங்களைச் சொல்ல வேண்டி வரும். தேர்தலில் ஏன் தோல்வியடைந்தோம் என்பதைக் கண்ணாடி முன் நின்று ஒவ்வொருவரும் கேட்டுப் பாருங்கள். அப்போது பதில் கிடைக்கும். நான் பேசினால் பல விடயங்களை சொல்ல வேண்டிவரும் – என்றார்.

இந்த அமளிகளுக்கு மத்தியில் எந்த முடிவும் எட்டப்படாமல் கூட்டம் முடிவடைந்தது.

இதனையடுத்து அரசைவிட்டு விலகி எதிர்க்கட்சியில் ஆட்சியை ஒப்படைப்பதா அல்லது நாடாளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்வதா என்று மீண்டும் கூடி ஆராய்வது என ஆளும் கட்சி நாடாளுமன்றக் குழு தீர்மானித்தது.

அதற்கு முன்னராக புதிய ஜனாதிபதி மற்றும் சபாநாயகரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் சஜித் பிரேமதாஸ கலந்துகொள்ளவில்லை. (ஐ)

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்பற்றி அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து செயற்படுமாறு வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, இலங்கையை அபிவிருத்தி செய்யும் பரந்த அளவிலான செயற்பாடுகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் முழு அளவில் ஆதரவை வழங்குமென்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## எட்டியந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எட்டியந்தோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் அங்கு விரைந்து விசாரணைகளில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எட்டியந்தோட்டை கணேபல்ல தோட்டத்திற்குள் நேற்று இரவு நுழைந்த கும்பல், யாருக்கு வாக்களித்தீர்கள் என்று அச்சுறுத்திவிட்டு தமிழ் மக்களின் சில வீடுகளைச் சேதப்படுத்தி அட்டூழியத்தில் ஈடுபட்டது.

அத்துடன், பெண்பிள்ளைகளிடம் அநாகரிகமாக அந்தக் கும்பல் நடக்க முயற்சி செய்ததாக மக்கள் பொலிஸாரிடம் அச்சத்துடன் தெரிவித்தனர்.

இந்தச் செயலில் ஈடுபட்டவர்கள் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று அச்சுறுத்தலுக்குள்ளானவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தமிழர்களின் சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. எட்டியாந்தோட்டைப் பொலிஸார் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொதுஜன பெரமுனவின் உறுப்பினரானநாடாளுமன்ற உறுப்பினர் ஹேரத், இது அயலவர்களுக்கு இடையேயான மோதல் என அவர்களது பாணியில் தெரிவித்தார்.

7 ஆவது ஜனாதிபதியாக கோட்டாபய நேற்று திங்கட்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

இந் நிலையில் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு வாக்களித்தீர்கள் என கேட்டு தமிழ் மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை சிறுபான்மையினரிடம் அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடாமல் நழுவினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வில் தான் இலங்கையின் நிரந்தர சமாதானம் தங்கியுள்ளது. தேசிய முக்கியத்துவம் மிக்க உரைகளின் போது கடந்த காலங்களில் ஜனாதிபதி பதவியை வகித்தவர்கள், அரசியல் தீர்வு பற்றிக் குறிப்பிடுவது வழக்கம்.

ஆனால், புதிய ஜனாதிபதி கோட்டாபய நேற்றுத் தனது கன்னி உரையில் அதனை தவிர்த்திருந்தார்.

மாறாக தேர்தல் விஞ்ஞாபனம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என விளித்துச் சமாளித்தார்.

இலங்கையின் ஒருமைப்பாடு, இறையாண்மையை மதிக்குமாறு சர்வதேச சமூகத்திடம் அவர் கேட்டிருந்தார். (ஐ)

## கோட்டாவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய பிரதமர் ரணில் தீர்மானித்துள்ளாரென அறியமுடிந்தது.

அதன் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வகையில் விசேட பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டு அதனை ஐக்கிய தேசியக் கட்சி ,ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் இதர கட்சிகளின் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றும் ரணில், பின்னர் பதவியை ராஜினாமா செய்வாரெனக் கூறப்பட்டது. (ஐ)

## தமிழர் இனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை எடுக்கத் தவறினால் சர்வதேச ரீதியாக ஐ.நாவின் உதவியுடன் வடக்கு –கிழக்குப் பிராந்தியப் பகுதியில் பொதுசன வாக்கெடுப்பு நடத்துமாறு நாம் பகிரங்கமாகக் கோருவோம்.

– இவ்வாறு கூறியுள்ளார் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் சுயேச்சை வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் மீது இனப்படுகொலைகளில் ஈடுபட்ட – போர்க் குற்றத்தில் ஈடுபட்ட – ஒரு போர்க் குற்றவாளியால் இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு, நீதி கிடைக்கும் வரை எம்மால் அவருக்கு வாழ்த்துக் கூறமுடியாது. முன்னாள் பாதுகாப்புச் செயலரின் வெற்றிக்காக வாழ்த்துக்களைக் கூறும் மனநிலையில் தமிழ் மக்கள் இல்லை. நானும் அந்த மன நிலையில் இல்லை.

ஒரு ஜனநாயக நாட்டில் புதிய ஜனாதிபதி வந்ததும் முதல் நூறு நாள்கள் வழங்கப்படும். அந்த நாள்களில் அவருக்கு எதிரான பாரதுரமான போராட்டங்களோ, கருத்துக்களோ, விமர்சனங்களோ முன்வைக்கப்படுவதில்லை. ஆகவே தற்போது ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ள கோட்டாபாயவுக்கும் 100 நாள்கள் நாம் வழங்குகின்றோம். நூறாவது நாள் முடிவதற்குள் தமிழர் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அதனை எடுக்கத் தவறினால் சர்வதேச ரீதியாக ஐ.நாவின் உதவியுடன் வடக்கு – கிழக்குப் பிராந்தியப் பகுதியில் பொதுசன வாக்கெடுப்பு நடத்துமாறு நாம் பகிரங்கமாகக் கோரி இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் அழுத்தங்களை வழங்குவோம். எந்தத் தடை வந்தாலும் சந்திக்கத் தயார். ஆகக் குறைந்தது இணைப்பாட்சி, சமஷ்டியைக் கொண்டதான தீர்வையாவது ஐக்கிய இலங்கைக்குள் வழங்க முன்வரவேண்டும்.

பௌத்த மதம் ஆழமாக வேரூன்றிய இடத்தில் வைத்து புதிய ஜனாதிபதி தனது பதவியை ஏற்றுள்ளார். அநுராதபுரத்தில் துட்டகைமுனு நினைவுச் சின்னத்துக்கு முன்பாக அவர் பதவி ஏற்றுள்ளார். இதன் ஊடாக நவீன துட்டகைமுனுவாக அவர் மாறப் போகின்றாரா? அல்லது வாக்களித்தாலும் வாக்களிக்காது விட்டாலும் அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதியாக இருக்கப் போகின்றாரா? என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் – என்றார். (ஐ–07)

## சம்பிக்க உள்ளிட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தது. அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, அசோக அபேசிங்க ஆகியோர் நேற்றுப் பதவி விலகினர்.

தேர்தல் முடிவுகள் வெளியானமையை அடுத்து, ஐ.தே.கவைச் சேர்ந்த மங்கள சமரவீர, கபீர் காசிம், மலிக் சமரவிக்ரம, ஹரின் பெர்னான்டோ, அஜித் பெரேரா ஆகியோர் நேற்று முன்தினம் பதவி விலகினர்.

இந்நிலையில், ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான, அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றுப் பதவி விலகினார்.

அதேவேளை போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்கவும் நேற்றுப் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ளார் எனத் தெரிவித்தார். (ஐ)

## மாவீரர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருக்கிறார் ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள யாழ்பாடி விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நான் சொல்லிக்கொள்வது என்னவெனில் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை. மாவீரர் தினம் அன்று காலை 9 மணிக்கு நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக மாவீரர் தின அனுஷ்டிப்பு ஆரம்பமாகும். மாலை 6.05 மணிக்கு கீதங்கள் இசைக்கப்பட்டு நாம் அஞ்சலி செலுத்துவோம்.

மாவீரர் நாளை வடக்கு – கிழக்கில் அனுஷ்டிக்க அனுமதிக்கமாட்டேன் என்று தனது தேர்தல் பிரசார காலத்தில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தார். எனினும் அவருக்கு நான் சொல்லிக் கொள்வது என்னவெனில் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை. ஆகவே கோட்டாபயவிடம் அனுமதியை நாம் கேட்கவில்லை.

ஆனால் இதற்கு இடையூறாக அரச தரப்பு இருக்கக் கூடாது. தடங்கல்களை ஏற்படுத்தவேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இதனை மீறி அரசு இடையூறுகளை, தடைகளை ஏற்படுத்த முற்பட்டால் தடைகள் உடைத்தெறியப்படும்.

மாவீரர் தினம் அன்று காலை 9 மணிக்கு நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக மாவீரர் தின அனுஷ்டிப்பு ஆரம்பமாகும்.

பின்னர் அனைத்து இடங்களிலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படும். எந்த இடத்திலாவது மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்பரவு செய்யும் பணிகள் தடை செய்யப்பட்டால் உடனடியாக எனக்குத் தெரியப்படுத்துங்கள். உடனடி யாக நான் அந்த இடத்துக்கு வந்து நான் அந்த துப்பரவுப்பணிகளுக்கு ஆதரவு கொடுப்பேன்.

தங்களின் இன்னுயிர்களைத் தியாகம் செய்த அத்தனை மாவீரர்களையும் நினைவு கூருவோம். விடுதலைக்காகப் போராடிய அனைவரையும் நெஞ்சில் இருத்தி நினைவு கூருவோம். மக்களோடு மக்களாக அனைவரும் உணர்வுபூர்வமாக மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படும். – என்றார். (ஐ–07)

## கச்சேரிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோரின் ஒளிப்படங்களை அகற்றிய நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் அரச அதிபரின் அலுவலகத்திற்குள் நேற்றுப் பகல் நுழைந்த நபர், அங்கிருந்த முன்னாள் ஜனாதிபதி மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர், பிரதமர் ஆகியோரின் ஒளிப்படங்களை அகற்றியுள்ளார். இதன்போது அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸார் அந்த நபரைக் கைதுசெய்து மட்டக்களப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சிறுபான்மை இன மக்கள் இனவாதமாக நடக்கவில்லை

நாட்டின் புதிய தலைவராக – ஜனாதிபதியாக – கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றுக் கொண்டு விட்டார்.

அதைத் தொடர்ந்து தென்னிலங்கையில் பல்வேறு புதிய அரசியல் விவகாரங்கள் வேகமாகக் கட்டவிழலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய கோட்டாபய ராஜபக்ஷ, அந்த உரையில் சில விடயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

“இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மை பௌத்த மக்களால் வெற்றி பெற முடியும் என நான் நம்பிய போதும் அந்த வெற்றியின் பங்காளிகளாக இணைந்து கொள்ளுமாறு தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் நான் அழைப்பு விடுத்தேன். ஆனாலும் அவர்கள் அதனைப் புறக்கணித்தனர். எனினும் இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களினதும் ஜனாதிபதி என்ற நிலையில் இனிவரும் காலங்களில் நாம் இலங்கையர் எனத் தொடர்ந்து பயணிக்க என்னுடன் கைகோர்த்துச் செயற்பட முன்வாருங்கள்!” – என்று அவர் கூறியிருக்கின்றார்.

இந்தக் கூற்றிலிருந்து சில விடயங்களை நாம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

ஒன்று – பௌத்த, சிங்கள வாக்குகளை மட்டும் நம்பியே – சிறுபான்மையினரின் ஆதரவு இன்றியே – தம்மால் வெற்றியீட்ட முடியும் என்ற முழு நம்பிக்கையுடன்தான் இந்தத் தேர்தலில் கோட்டாபய குதித்திருக்கின்றார் என்பதை அவரே இப்போது ஒப்புக்கொள்கின்றார். “சிறுபான்மையினரின் வாக்குகள் எனக்குத் தேவையில்லை. பௌத்த, சிங்கள வாக்குகளுடன் மட்டுமே நான் வெற்றி பெறுவேன்.” – என்று இந்தத் தேர்தலுக்கு முன்பாக அவர் தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவரிடம் கூறினார் என முன்னர் செய்திகள் வெளியாகின. அப்போது அவரது ஊடகப் பிரிவு அப்படி அவர் கூறவில்லை என்று மறுத்துரைத்திருந்தாலும், அவர் அப்படிக் கூறியிருப்பார், அந்த நிலைப்பாட்டில்தான் அவர் இருந்து வந்திருக்கின்றார் என்பது இப்போது தெளிவுபடுத்தப்பட்டிருப்பது நல்லதே.

இரண்டாவது – இந்த நாட்டின் சிறுபான்மையினரான வடக்கு, கிழக்குத் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களினால் நிராகரிக்கப்பட்ட நிலையிலேயே, பெரும்பான்மை பௌத்த, சிங்கள வாக்குகளின் மீதேறியே தாம் இந்த அதிகார பீடத்துக்கு வந்திருக்கின்றார் என்ற கசப்பான உண்மை அவருக்கு உறைப்பாகத் தெரிகின்றது – புரிகின்றது – என்பதையே அவரின் இந்த உரையும் உறுதிப்படுத்துகின்றது.

மூன்றாவது – இப்படித் தம்மைப் புறமொதுக்கி நடந்த சிறுபான்மையினரை, இலங்கையர் என்ற தேசிய எண்ணத்துடன் தம்முடன் கைகோர்த்துச் செயற்பட முன்வருமாறு அவர் அழைக்கின்றாரே தவிர, அந்தச் சிறுபான்மையினரின் நீதி, நியாயமான அபிலாஷைகளை – எதிர்பார்ப்புக்களை – வேணவாக்களை – நிறைவு செய்து நிறைவேற்றும் திடசங்கற்பமோ. உறுதிப்பாடோ, எதிர்பார்ப்போ தம்மிடம் இருப்பதாக அவர் கோடி காட்டவேயில்லை.

ஆகவே, அவரது பதவியேற்பு உரை, இந்தத் தேர்தலில் அவரை அடியோடு நிராகரித்த சிறுபான்மை மக்களை நோக்கி, அவர்களை அரவணைக்கும் போக்கில் விடுக்கப்பட்ட ஒன்றாகத் தெரியவில்லை.

அதில் தமக்குச் சாதகமான பச்சை சமிக்ஞை ஏதும் இருப்பதாக சிறுபான்மையினரோ அவர்களது தலைவர்களோ கருதுவதற்கு எந்த இடமும் இல்லை.

ஆனாலும், நடந்து முடிந்த இந்தத் தேர்தலை ஒட்டி வடக்கு, கிழக்குத் தமிழர்களின் ஒட்டுமொத்த நிலைப்பாடு எத்தகையதாக அமைந்தது என்பது தொடர்பில் ரெலோ அமைப்பின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டியுள்ள ஒரு விடயம் இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

“ இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் தீர்மானம் அவர்கள் ஓரினம் என்ற முறையில் ஒன்றுபட்டு எடுக்கப்பட்டதாக இருந்தாலும், அது இனம் ஒன்றுக்கு எதிரான இன ரீதியான நடவடிக்கை அல்ல என்பதை புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

“ பௌத்த, சிங்கள வாக்குகளை மட்டும் நம்பி நின்ற கோட்டாபய ராஜபக்ஷவை பெரும்பான்மையான தமிழர்கள் நிராகரித்திருந்தாலும், அவர்களின் தீர்மானம் பௌத்த, சிங்களத்துக்கு எதிரான – இனவாத அடிப்படையிலான – ஒன்றல்ல. ஏனெனில் கோட்டாபய ராஜபக்ஷவை நிராகரித்த நமது தமிழ் மக்கள் மற்றுமொரு பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவருக்கே தமது வாக்குகளை அளித்துள்ளனர் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.” – இப்படி செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அளித்துள்ள விளக்கம் சகல தப்புகளும் புரிந்து கொள்ள வேண்டிய விடயம்.

குறிப்பாக இந்த ஜனாதிபதித் தேர்தலை இனவாதக் கண்கொண்டு நோக்கும் தென்னிலங்கைச் சக்திகள் இதனை நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

பௌத்த, சிங்களப் பேரினவாதம் ஒரு புறமும், சிறுபான்மை இனங்கள் மற்றுமொரு புறமாகவும் துருவமயப்பட்டிருக்கும் நிலைப்பாட்டை இந்தத் தேர்தல் உறுதிப்படுத்தி நிற்கின்றது. ஆனால் அதன் அர்த்தம் சிறுபான்மையினர் இனவாதமாகச் செயற்படுகின்றார்கள் என்பது அல்ல.

இது சம்பந்தப்பட்டோருக்குப் புரிந்தால் சரி.

# தேர்தலில் ஒரு தரப்பு வெற்றி; ஆனால் மக்களுக்கோ தோல்வி! அதை மக்களே விரைவில் புரிந்து கொள்வர் என்கிறது ஜே.வி.பி.



ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் ஒரு தரப்பினருக்கு வெற்றியை வழங்கியிருந்தாலும் மக்கள் தோல்வியையே சந்தித்துள்ளனர் என்றும் அதனை அவர்கள் விரைவில் உணர்ந்து கொள்வார்கள் என்றும் தெரிவித்துள்ள தேசிய மக்கள் சக்தி இயக்கம், மக்களுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்படப் போவதாகவும் கூறி யுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளின் பின்னர் விசேட ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அந்த இயக்கம் அதிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

மக்கள் சக்தி இயக்கத்தின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கா இந்தத் தேர்தலில் மூன்றாவது இடத்துக்கு வந்து தோற்ற நிலையிலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு: –

ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் களமிறங்கிய கோட்டபாய ராஜபக்ஷ வெற்றிபெற்றுள்ளார். தேசிய மக்கள் சக்தி என்ற வகையில் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தேர்தல் பெறுபேறுகள் தொடர்பில் எம்மால் திருப்தி கொள்ள முடியாது. நாங்கள் எதிர்பார்த்த பெறுபேற்றை எங்களால் அடைய முடியாமல் போயுள்ளமையை நாங் கள் ஏற்றுக்கொள்கின்றோம்.

தேசப்பற்றுள்ள ஜனநாயகத்தை பிரதிபலிக்கும் அரசியல் முகாம் என்ற வகையில் தேசிய மக்கள் சக்தி இம்முறை தேர்தலின்போது மக்களை மையப்படுத்தி பாரிய செயற்றிட்டத்தை முன்னெடுத்திருந்தது. அதற்கமைய இலங்கை தேர்தல் மேடைகளில் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டு வந்த சேறு பூசல்கள், வெறுக் கத்தக்க பேச்சுகள், சிறுபிள்ளைத்தனமான வாக்குறுதிகளை வழங்குவதை விடுத்து நாட்டில் நிரந்தரமான கொள்கையைக் கடைப்பிடிக்க நாம் நடவடிக்கை எடுத்தோம்.

இந்த நடவடிக்கையில் பெரும் எண்ணிக்கையானோரை அணிதிரட்ட எடுத்த நடவடிக்கையானது எமக்கு கிடைத்த நீண்டகால வெற்றியாகும்.

ஜனாதிபதி தேர்தல் மேடைகளில் சில கட்சிகள் இனவாதத்தைப் பேசி ஒருவருக்கொருவரை பயமுறுத்தும் முயற்சிகளை முன்னெடுக்கையில், இனவாதத்தை விடுத்து அரசியல் மற்றும் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த பிரசார மேடைகளில் எம்மால் முடிந்தது.

இந்நிலைமை எதிர்காலம் தொடர்பான நல்ல சமிக்ஞை. ஜனாதிபதி தேர்தலை பொறுத்தமட்டில் வடபகுதி மக்கள் மத்தியிலும் தென்பகுதி மக்கள் மத்தியிலும் பயத்தை உருவாக்கி மக்களை திசை திருப்பி தமக்கு வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக இரண்டு அரசியல் கட்சிகளும் முயற்சித்தன என்பது தெளிவான விடயமாகும்.

கொள்கைகள், வாதப்பிரதிவாதங்களினூடாக மக்களைத் தெளிவுபடுத்தி அவர்களின் வாக்குகளை பெறுவதற்கு நாங்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் அக்கட்சிகளின் நடவடிக்கைகளினால் பயன்தராமல் போனமை தெளிவாகியது.

எது,எப்படியாயினும் இந்தத் தேர்தல் முடிவுகளின்படி வெற்றியடைந்த தரப்பினர் தங்களுடைய வெற்றி தொடர்பில் மகிழ்ச்சி கண்டாலும், மக்கள் இதனால் தோல்வியையே கண்டுள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல் செயற்பாடுகள், கலாசார முரண்பாடுகள் தொடர்பில் தற்போது ஆட்சிக்கு வந்தவர்களிடம் எந்தவித தீர்மானமும் இல்லை.

தாம் இதுவரையும் வெற்றி பெறவில்லை என்பதையும், இனிவரும் காலங்களில் வெற்றி பெற வேண்டும் என்றும் மக்கள் விரைவில் புரிந்து கொள்வார்கள். இவ்வாறான நிலையில் மக்கள் தொடர்பான எமது கடமையைத் தொடர்ந்தும் நாம் முன்னெடுப்போம்.

அதேவேளை தேர்தலின் போது எந்தவித அரசியல் இலாபத்தையும் எதிர்பாராமல் எம்மோடு கைகோர்த்து செயற்பட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், மக்கள் மத்தியில் நாம் களமிறக்கிய வேட்பாளர் தோல்வியடைந்திருந்தாலும் நாங்கள் சோர்வடையாமல் தொடர்ந்தும் எமது வெற்றிக்காகப் போராடுவோம் எனத் தெரிவித்துக் கொள்கிறோம் – என்றுள்ளது.

# ஜனாதிபதி கோட்டாபயவின் அழைப்பை வரவேற்கிறோம்

## மு.காவின் பிரதித் தலைவர் நஸிர் அஹமட்

கொழும்பு, நவ. 19

‘இலங்கையர் எனக் கைகோர்க்க வாருங்கள்’ என சிறுபான்மை சமூகங்களுக்கு அழைப்பு விடும் இலங்கையின் 7ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் அகமகிழ்கிறோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஸிர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அவரது வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது –

தேர்தல் முடிவு நாட்டு மக்களுக்கு நல்லதொரு செய்தியைச் சொல்லியுள்ளது. குறிப்பாக இரு துருவநிலை ஏற்பட்டுள்ளமை நிரூபனமாகியுள்ளது. இதனை மாற்றியமைக்கவேண்டியது காலத்தில் கட்டாயமாகும்.

எனினும் நேற்றைய தினம் அவர் பதவி ஏற்ற வைபவத்தின்போது தெரிவித்துள்ள கருத்து மிகச் சிறப்பான ஒன்றுமாகும். அதாவது, “இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மை பௌத்த மக்களால் மாத்திரம் வெற்றிபெற முடியும் என நான் நம்பிய போதும் அந்த வெற்றியின் பங்காளிகளாக தமிழ், முஸ்லிம் மக்களையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தேன். ஆனாலும் அவர்கள் அதனைப் புறக்கணித்தனர். எனினும் இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் ஜனாதிபதி என்ற நிலையில் இனிவரும் காலங் களில் நாம் இலங்கையர் என தொடர்ந்து பயணிக்க என்னுடன் கைகோர்த்துச் செயற்பட முன் வாருங்கள்!” – என அவர் அழைத்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கின்றது.

சிறுபான்மை மக்களை அனுசரித்து அவர்களது அபிலாஷைகளை நிறை வேற்றும் வகையில் அவர் தமது பணிகளைத் தொடருவராக இருந்தால் அனைத்து சமூகங்களும் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளும் ஒருதலைவராக அவர் எதிர்காலத்தில் சிறப்பு பெறுவார் என்பது திண்ணம்.

சிங்கள சமூகம் பெருவாரியாக ஏற்றுக்கொண்டுள்ள ஒரு தலைவர் என்ற ரீதியில் இது காலவரையில் சிறுபான்மை சமூகங்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை புதிய ஜனாதிபதி முன்வைப்பராக இருந்தால் அதனைச் சிங்களச் சமூகம் ஏற்றுக்கொள்ளும் என்பதை நான் திடமாக நம்புகிறேன்.

எனவே அனைத்து சமூகங்களின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டும் வண்ணம் சிறந்தொரு முன்னுதாரணம் உள்ள ஆட்சியை அவர் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என இவ்வேளையில் எமது சமூகத்தின் சார்பாக வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் – என்றுள்ளது.

(ஐ)




**நாளை**
20.11.2019
புதன்கிழமை
நட்சத்திரம்: மகம் மு.இ 6.49 வரை
திதி : அட்டமி மு.ப 11.50 வரை
இராகுகாலம் : 12.09 – 1.39
சுப நேரம் : 4.39 – 6.09

# இனப்பிரச்சினையைத் தீர்க்க கோட்டா ஆக்கபூர்வமாக முயற்சிக்க வேண்டும்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

**கொழும்பு, நவ. 19**
**தமிழ் மக்களின் தீர்ப்பை ஏற்று - புதிய ஜனாதிபதி தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மிக அமோக மாக சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியா கத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிங் கள மக்களின் ஜனநாயகபூர்வான வாக்களிப்பையும் அதனூடாக கோட் டாபய ராஜபக்ஷ பெற்றுக் கொண்ட வெற்றியையும் தமிழ் மக்கள் சார்பாக நாங்கள் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

தமிழ் மக்கள் தமது உரிமை களுக்காக நீண்டகாலம் போராடி வந்துள்ளனர். அந்தப் போராட்டத் தில் அவர்கள் பாரிய இழப்புக் களைச் சந்தித்துள்ளனர். அதுமட் டுமன்றி, போராட்ட காலகட்டத்தில் பல்வேறுபட்ட அரசுகளினூடாக பலகசப்பான அனுபவங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

ஆயுதப் போராட்டம் மௌனிக் கச் செய்யப்பட்டாலும், தமிழ் மக் கள் முன்வைத்த நியாயமான கோரிக்கைகளுக்கு இன்னமும் தீர்வு எட்டப்படவில்லை. அவ்வா றான கோரிக்கைகளை முன்வைத்து அதற்கான ஒரு மக்கள் ஆணையை வெளிப்படுத்தும் முகமாகவே தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வாக்களித்தி ருக்கின்றார்கள்.

ஆகவே தமிழ் மக்களின் ஜனநா யகத் தீர்ப்பை மதித்து எமது மக்க ளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய ஜனாதிபதி தன்னால் இயன்ற நடவடிக்கைகளை எடுப்பார் என்று எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்கும் யுத்தத்தினால்



ஏற்பட்ட ஏனைய பல்வேறுபட்ட பிரச்சி னைகளை தீர்ப்பதற்கும் புதிய ஜனாதி பதி எடுக்கக்கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஒத்துழைப்பை வழங்கும்.

தமிழ் மக்கள் தங்களது கோரிக் கைகளுக்காக ஒன்று திரண்டு வாக்க ளித்தமைக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கிறது – என்று குறிப் பிடப்பட்டுள்ளது. (ஐ)

# ஒட்டுமொத்த மக்களின் மனங்களையும் வெல்ல புதிய ஜனாதிபதி முயல வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. வேண்டுகோள்



புதிய ஜனாதிபதி தாம் ஒட்டுமொத்த நாட்டின் ஜனாதி பதி என்பதனை ஏற்றுக்கொண்டு, மக்கள் மனங்களை வெல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். தாம் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரி வித்துள்ளவை வருமாறு: –

நடந்து முடிந்த இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜ பக்ஷ பெரும்பான்மை வாக்குகளினால் வெற்றி பெற்று எட்டாவது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

இத்தேர்தலின் முடிவுகள் தமிழ் மக்கள் தமது ஜன நாயகக் கடமையை ஒற்றுமைப்பட்டு வெளிப்படுத் தியுள்ளமையும் என்னென்ன காரணங்களுக்காக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கவேண்டுமென தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு) மக்களை உரிமையோடு கேட்டுக்கொண்டதோ அக்காரணங்கள் அனைத்தும் மக்களால் ஏற்றுக் கொள் ளப்பட்டமையையும் வெளியப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்களின் உணர்வுகளும், உள்ளக்கிடக்கைகளும் ஒவ்வொரு வாக்குகளினாலும் உலகத்துக்கு உணர்த்தப்பட்டுள்ளன.

எமது மக்களின் நீண்டகால அபிலாசைகள், தீர்த்து வைக்கப்படாத அன்றாட பிரச்சினைகள், கேள்விகளுக் குள்ளாக்கப்பட்டுள்ள எதிர்கால வாழ்வு என இவையெல் லாம் ஏமாற்றங்களாகத் தொடர்வதின் நீட்சியே வாக்கு களூடாகப் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெரும்பான்மை சிங்கள மக்களின் நிலைப்பாடானது தமிழ் மக்களின் நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. காலம் காலமாகச் சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களின் உணர்வுகளையும், கோரிக்கைகளையும் ஏமாற்றிக் கொண்டிருப்பதும், உதாசீனப்படுத்துவதும் தெரிந்தும் பெரும்பாண்மை இனம்தற்குத் துணை நிற்பது வருத்தமானதே.

சிங்களத் தலைமைகள் சிங்களப் பெரும்பான்மை மக்களைத் தவறாக வழிநடத்திக்கொண்டு அரசியல் நன்மைகளை அனுபவிக்கவே விரும்புகின்றார்கள். ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிங்கள தேசம் அனுபவிக் கின்ற அனைத்து உரிமைகளையும் தமிழ் மக்களும் அனுபவிக்கவேண்டும் எனக் கோருவதில் தவறொன் றும் காணமுடியாது.

புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் சிங்கள மக்களும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்களும் தெற்கின் சிங்கள மக்கள தும் சமகாலத்து வேணவாக்கள் வேறு வேறானவை என்பது தேர்தல் முடிவுகளில் பிரதிபலிக்கின்றது. வெவ் வேறான பார்வைகளினூடாகவும், அணுகுமுறைகளினூ டாகவுமே தமிழ், சிங்கள மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்க்கப்படவேண்டும்.

புதிய ஜனாதிபதி தனது 5 வருட பதவிக்காலத்தில் இயலுமான வரை கடந்த அரசாங்கங்கள் விட்ட தவறு களைப் பாடமாகக் கொண்டு திருத்தங்களுடன் பயணித் தால் நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் வாழ்வுண்டு எனக் கருதுகின்றேன்.

இந்நிலையில் தமிழ் மக்களின் எண்ணச் சிந்தனை களை ஏற்றுக்கொண்டு இரு பிரதான வேட்பாளர்களில் சிறந்தவர் யாரென எமது மக்களிடம் நாம் கூற அதை சிரமேல் ஏற்று

தமிழர் ஒற்றுமையை மீண்டும் ஒருதடவை நிரூபித் துக் காட்டிய எமது உறவுகளுக்கு எனது மனப்பூர்வ மான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டுக்கு வீடு ஊடகங்கள் ஊடாக எமது கோரிக்கை களை எடுத்து சென்று மக்களிடம் கொண்டு சேர்த்து அரும் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் மனமுவந்து நன்றிகளைத் தெரிவித்துகொள்கின்றேன்.

மேலும் பெரும்பான்மை தமிழ்மக்களால் கோட்டாபய ராஜபக்ஷ நிராகரிக்கப்பட்டாலும் இன்னுதொரு பெரும் பான்மை இனத்தை சார்ந்தவருக்கே தமிழ் மக்கள் வாக்களித்திருந்தார்கள். இது அரசியல் ரீதியான முடிவே தவிர இன ரீதியானதல்ல என்பதைப் புரிந்தவராக, புதிய ஜனாதிபதி ஒட்டுமொத்த நாட்டின் ஜனாதிபதி என்பதனை ஏற்றுக்கொண்டு, மக்கள் மனங்களை வெல்ல நடவடிக்கைகளை எதிர்காலத்தில்மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். – என்று உள்ளது.

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகநாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலை யம், வல்வெட்டித்துறை ஒரு பகுதி, தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

ஈரப்பெரியகுளம், நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், உளுக்குளம், செட்டிக்குளம் நகர பிரதேசம் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில் -**

எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, Timex ஆடைத்தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, Industrial Estate I & II, Palmyra house, தலை மன்னார் கடற்படைமுகாம், எருக்கலம்பிட்டி நீர்ப்பா சன திட்டம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற் சாலை, தலைமன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட் டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள் ளார்.

# இரு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் மோதல்!

கொழும்பு, நவ. 19

பொலன்னறுவையில் இரண்டு அரசியல் கட்சி களின் ஆதரவாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் ஐந்து பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் ஹிங்குரக்கொட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியைக் கொண்டாடு வதற்காக பால் சோறு பொங்குதற்குத் தயாரானபோது, மற்றுமொரு குழுவினர் தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் காயமடைந்த 5 பேர் ஹிங் குரக்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், அவர்களில் நால்வர் பொலனறுவை வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். தாக்குதலில் ஓட்டோ ஒன்றும் சேதமடைந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ)

# ரணிலின் விசேட யோசனை விரைவில் சபைக்கு வரும்!

கொழும்பு, நவ. 19

கோட்டாபய ராஜபக்ஷ புதிய ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துள்ள நிலையில் , உடனடி நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்ல பிரதமர் ரணில் தீர்மானித்துள்ளார். இதற்காக அவர் விசேட யோச னையொன்றை வரும் நாள்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். அதில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் உடனடி பொதுத் தேர்தலுக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

நாடாளுமன்றத் தேர்தல் வரை காபந்து அரசு ஒன்றை முன்னெடுக்க ஏற்பாடு நடக்கிறது. அதில் தற் காலிக பிரதமர் ஒருவரை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள் ளது. தற்காலிகப் பிரதமர் என்று கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரை நியமிக்கவும் பின்னர் நாடாளு மன்றத் தேர்தலில் மஹிந்த போட்டியிடுவது என்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தரப்பில் ஆலோசிக்கப் பட்டு வருகிறது. ஆனாலும் மஹிந்தவை இடைக்காலப் பிரதமராக நியமிக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# கோட்டாவின் தனிப்பட்ட செயலராகிறார் ரோஹித!

கொழும்பு, நவ.

மஹிந்த ராஜபக்ஷவின் கடைசி மகனான ரோஹித ராஜபக்ஷ, புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட செயலாளராக நியமிக்கப்பட வுள்ளார் எனச் சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளி யிட்டுள்ளது.

கோட்டாபய அனுராதபுரத்தில் சத்தியப் பிரமா ணம் செய்துகொண்ட பின்னர் அவரது பிரத்தியேக செயலாளராக ரோஹித ராஜபக்ஷ இணைத்துக் கொள்ளப்படவுள்ளார் என அந்த ஊடகம் குறிப்பிட் டுள்ளது. (ஐ)

# பஸ் – லொறி மோதித் தீப்பிடித்தன; 10 பேர் உயிரிழப்பு; 25 பேர் காயம்

## ராஜஸ்தான் நெடுஞ்சாலையில் நேற்றுச் சம்பவம்



ஜெய்ப்பூர்,நவ.19

ராஜஸ்தானில் லொறி மீது பஸ் மோதி தீப் பிடித்ததில் 10 பேர் பலியானார்கள்.

ராஜஸ்தான் மாநிலம் பிகானர் மாவட்டம், ஸ்ரீ தங்கர்கர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் நேற்றுக் காலையில் பயணிகளுடன் வந்த பஸ் எதிரே வந்த லொறியுடன் மோதியதில் இரண்டு வாகனங்களும் தீப்பிடித்து எரிந்தன. இந்த விபத்தில் பஸ்ஸிற்குள் பயணிகள் சிக்கி கொண்டனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 10 பேர் பலியாகினர். சுமார் 25 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கிய வாகனங்கள் சாலையில் கவிழ்ந்ததால் தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. பொக்லைன் எந்திரங்கள் மூலம் வாகனங்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

# இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பாப்டே

## நேற்றுப் புதுடில்லியில் பதவியேற்பு



புதுடெல்லி,நவ.19

டெல்லியில் இந்திய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக எஸ்.ஏ. பாப்டே நேற்றுப் பதவியேற்று க் கொண்டார்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் (வயது 65) நேற்று முன் தினம் ஓய்வுபெற்றார். தனக்கு அடுத்தபடியாக தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டியவரை தலைமை நீதிபதியே பரிந்துரை செய்வது மரபு.

அதன்படி, உச்சநீதிமன்றத்தின் மிக மூத்த நீதிபதியான எஸ்.ஏ.பாப்டேவை புதிய தலைமை நீதிபதியாக நியமிக்கும்படி, மத்திய சட்ட அமைச்சகத்துக்கு ரஞ்சன் கோகாய் பரிந்துரை செய்தார்.

அதை ஏற்று, நீதிபதி எஸ்.ஏ.பாப்டேவை புதிய தலைமை நீதிபதியாக நியமிக்க மத்திய சட்ட அமைச்சகம் முடிவு செய்தது. எஸ்.ஏ.பாப்டே நியமன உத்தரவை ஜனாதிபதி ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது. அதில், ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் கையெழுத்திட்டார்.

இதையடுத்து, புதிய தலைமை நீதிபதி நியமனம் தொடர்பாக மத்திய சட்ட அமைச்சகம் அதிகாரப்பூர்வ அறிவிப்பாணையை வெளியிட்டது.

எஸ்.ஏ.பாப்டேவை நேரில் சந்தித்த மத்திய சட்ட அமைச்சக உயரதிகாரிகள், நியமன உத்தரவை அவரிடம் வழங்கினர்.

ரஞ்சன் கோகாய் ஓய்வு பெற்றமையைத் தொடர்ந்து, புதிய தலைமை நீதிபதியாக எஸ்.ஏ. பாப்டே நெற்றுப் பதவி ஏற்றுக் கொண்டார். அவர் நாட்டின் 47 ஆவது தலைமை நீதிபதியாகிறார்.

டெல்லி ராஷ்டிரபதி பவனில் இதற்காக நடந்த நிகழ்ச்சியில் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த், பாப்டேவுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்துள்ளார். இதனை அடுத்து தனது தாயாரின் காலில் விழுந்து பாப்டே ஆசி வாங்கி கொண்டார்.

# கர்நடகாவில் எம்.எல்.ஏவை கத்தியால் குத்தியவர் கைது



கர்நாடகாவின் மைசூரு நகரில் திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. தன்வீர் சைத் சென்றுள்ளார். அவர் அருகே சென்ற நபர் ஒருவர் திடீரென சைத்தின் கழுத்தில் கத்தியால் குத்தியுள்ளார்.

இதன்பின் அங்கிருந்து தப்பி செல்ல அந்த நபர் முயன்றுள்ளார். அவரை சுற்றியிருந்தவர்கள் உடனடியாக பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதன்பின்பு சைத் மீட்கப்பட்டு உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். சிகிச்சைக்கு பின்னர் அவர் சீரான நிலைக்குத் திரும்பியுள்ளார் என கூறப்படுகிறது.

எனினும் இதுபற்றி அதிகாரபூர்வத் தகவலை மருத்துவமனை நிர்வாகம் வெளியிடவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவம் திருமண நிகழ்ச்சியைப் படம் பிடிக்க வந்த புகைப்படக்காரர்களால் படம் பிடிக்கப்பட்டு உள்ளது.

அந்நபர் மைசூரு நகரை சேர்ந்த பர்ஹான் பாா (வயது 24) என விசாரணையில் தெரிய வந்துள்ளது. கைவினை கலைஞரான அவர் எதற்காக இந்தச் செயலில் ஈடுபட்டார் எனத் தெரியவில்லை.

முன்னர் சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியில் மந்திரியாகப் பதவி வகித்தவர் சைத் ஆவார்.

# ஐந்து பேரைக் கொன்ற காட்டு யானை மரணம்



அஸாமில் கோல்பாரா பகுதியில் அட்டகாசம் செய்து வந்த காட்டு யானை உயிரிழந்தது.

வனத்துறை அதிகாரிகளுக்குப் போக்குக் காட்டி வந்த மதம் பிடித்த காட்டு யானை ஒன்று 5 பேரை மிதித்துத் தூக்கியெறிந்து கொன்றது.

இதனையடுத்து அந்த யானையைப் பிடிக்க ஆளில்லாத குட்டி விமானங்களைப் பயன்படுத்திய வனத்துறையினர் அதன் நடமாட்டத்தைக் கண்காணித்து மயக்க ஊசி போட்டு சிறைபிடித்தனர்.

ஓராங் தேசிய பூங்காவில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அந்த யானை உடல்நல பாதிப்பால் உயிரிழந்தது.

# சபரிமலை ஐயப்பன் கோவிலில் அலைமோதும் பக்தர்கள் கூட்டம்



சபரிமலை ஐயப்பன் கோவிலில் நடை திறக்கப்பட்ட முதல் நாளிலேயே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டமையால் கூட்டம் அலை மோதியது.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல மற்றும் மகர விளக்கு பூஜைகளுக்காக சனியன்று மாலை நடை திறக்கப்பட்டது.

கார்த்திகை முதல்நாளான நேற்று முன்தினம் அதிகாலை கோவில் திறக்கப்பட்டதும் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமியே சரணம் ஐயப்பா என்று சரண கோம் எழுப்பினர்.

விடுமுறை தினம் என்பதால் நேற்று முன்தினம் கோயிலில் கட்டுக்கடங்காத பக்தர்கள் கூட்டம் காணப்பட்டது.

கொட்டும் மழையிலும் சுவாமி தரிசனத்திற்காக நீண்ட வரிசையில் பல மணி நேரம் பக்தர்கள் காத்திருந்தனர். பக்தர்கள் தரிசனம் செய் வதற்காக நேற்று முன் தினம் 18 மணி நேரம் நடை திறக்கப்பட்டிருந்தது.

இதனிடையே, உச்ச நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பு வரும் வரை இளம் பெண் களை தரிசனத்துக்கு அனுமதிக்க வேண்டாம் என்று திருவிதாங்கூர் தேவசம் போர்டுக்கும் சட்ட ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து இளம் பெண்கள் சபரிமலை செல்வதைத் தடுக்க தேவசம்போர்டு நடவடிக்கை எடுத்துள்ளது. பம்பை, சன்னிதானம் ஆகிய பகுதிகளில் தேவசம்போர்டு ஊழியர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# ஹொங்கொங்கில் போராட்டக்காரர்களின் மீது பொலிஸார் ரப்பர், கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு




சீன அரச நிர்வாக ஆட்சியி எதிர்த்து வரும் போராட்டக்காரர்கள் ஹொங்கொங் பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்ட நிலையில், அவர்களைக் கட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும், ரப்பர் குண்டுகளையும் பயன்படுத்தினர்.

குற்ற வழக்குகளில் சிக்கும் கைதிகளை சீனாவுக்கு நாடு கடத்த வகை செய்யும் சட்டப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹொங்கொங்கில் கடந்த 5 மாதங்களாக போராட்டம் நடந்து வருகிறது. போராட்டக்காரர்களை ஒடுக்கும் பணியில் ஹொங்கொங் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர்.

சீனாவுடனான சாலைப் போக்குவரத்தைத் துண்டிக்கும் வகையில், போராட்டக்காரர்கள் பல்வேறு இடங்களில் முற்றுகைப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இரண்டு நாள்களுக்கு முன் ஹொங்கொங் பாலிடெக்னிக் பல்கலைக்கழகத்தை ஆக்கிரமித்த போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது செங்கல், அம்பு, பெட்ரோல் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர். பொலிஸாரின் வாகனத்தையும் தீவைத்துக் கொளுத்தினர். இதனால் அப்பகுதியே போர்க்களம் போல் காட்சியளித்தது.

நேற்று முன்தினமும் இரவு முழுவதும் போராட்டம் நீடித்த நிலையில், நேற்று அதிகாலையில் பல்கலைக் கழக வளாகத்தைப் பொலிஸார் சுற்றி வளைத்தனர். போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும், ரப்பர் குண்டுகளையும் வீசினர். உள்ளே இருந்த நூற்றுக்கணக்கானோர் வெளியேற முடியாதபடி பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

## சிகிச்சைக்காக நவாஸ் ஷெரீப் இன்று லண்டன் புறப்படுகிறார்



இஸ்லாமாபாத்,நவ19

பாகிஸ்தன் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மருத்துவ சிகிச்சைக்காக இன்று லண்டன் செல்ல உள்ளார்.

ஊழல் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதையடுத்து சிகிச்சைக்காக அவருக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டது. எனினும் லண்டன் சென்று சிகிச்சை பெற்றால் மட்டுமே அவரது உடல்நிலை தேறும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டவர்களின்பட்டியலில்இருந்து அவரது பெயரை பாகிஸ்தான் அரசு நீக்காததால் அவர் லண்டன் செல்வதில் சிக்கல் எழுந்தது. அவர் லண்டன் செல்லவேண்டுமானால் ரூ.700 கோடிக்கான உறுதிமொழி பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட சில நிபந்தனைகளை இம்ரான்கான் அரசு விதித்தது.

அதனை ஏற்க மறுத்த நவாஸ் ஷெரீப் இது தொடர்பாக லாகூர் மேல்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுத் தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த நீதிபதிகள் எந்த வித நிபந்தனையும் இன்றி நவாஸ் ஷெரீப்பின் பெயரை வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டவர்களின்பட்டியலில்இருந்து நீக்க அரசுக்கு உத்தரவிட்டனர். இதன் மூலம் அவர் லண்டன் செல்வதில் நீடித்த சிக்கல் நீங்கியது.

இந்தநிலையில்,நவாஸ் ஷெரீப், சிகிச்சைக்காக இன்று (செவ்வாய்க்கிழமை) லண்டன் புறப்பட்டு செல்வார் என பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், அனைத்து வகையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களை கொண்ட விமான அம்புலன்ஸில் நவாஸ் ஷெரீப், இன்று லண்டன் செல்கிறார் எனக்கூறினார்.

மேலும் அவர், சிறிது காலம் லண்டனில் தங்கி சிகிச்சை பெறும் நவாஸ் ஷெரீப், அதன் பின்னர் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்ல வாய்ப்பு உள்ளது என்றார்.

## ஜோர்ஜியா நாடாளுமன்றை முற்றுகையிட்டு போராட்டம்



ஜோர்ஜியா நாட்டின் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு எதிர்கட்சியினர் போராட்டம் நடத்தியதால் அங்கு பதற்றம் நிலவியது.

தேர்தல் சீர்திருத்தம்தொடர்பான பிரேரணைநாடாளுமன்றத்தில் தோல்வியடைந்ததை அடுத்து எதிர்க்கட்சியினர்போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன் ஒருபகுதியாக தலைநகர் திபிலிசியில் உள்ள நாடாளுமன்றத்தை முற்றுகையிட்ட அவர்கள் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாத அரசு பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர்.

## வடகொரியப் போர் ஒத்திகையை ஜனாதிபதி நேரில் சென்று ஆய்வு



வடகொரியாவின் விமானப்படையினர் மேற்கொண்டிருக்கும் போர் ஒத்திகையை, அந்நாட்டின் அதிபர் கிம் ஜாங் உன், நேரில் சென்று ஆய்வு செய்தமையோடு, வீரர்களோடு கலந்துரையாடினார்.

தென்கொரியாவும், அமெரிக்காவும், கூட்டாக இணைந்து போர் ஒத்திகையை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த நிலையில், அது தள்ளிவைக்கப்பட்டது. இந்தச் சூழலில், வடகொரிய விமானப்படையின் பாராசூட் படையணி வீரர்கள் கடந்த சில தினங் களாக தீவிர போர் ஒத்திகையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதனை, கடந்த மூன்று நாள்களில், இரண்டாவது முறையாக, அதிபர் கிம் ஜாங் உன் ஆய்வு செய்திருக்கிறார் என வடகொரிய அரசு கூறியிருக்கிறது.

## பல்கலை ஆய்வகத்தில் போதைப்பொருள் தயாரித்த 2 அமெ. பேராசிரியர்கள் கைது!

அமெரிக்காவில் பல்கலைக்கழக ஆய்வகத்தில் போதைப்பொருள் தயாரித்த வேதியியல் (இரசாயனவியல்) துறை பேராசிரியர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அர்காடெல்ஃபியா ஹெண்டர்சன் பல்கலைக் கழகத்தில் வேதியியல் துறை பேராசிரியர்களாக பணியாற்றும் டெர்ரி டேவிட் பேட்மேன், பிராட்லி ஆலன் ரோலண்ட் ஆகிய இருவரும் ஆய்வகத்தில் மெத்தம்ஃபெட்டமைன் என்ற போதைப்பொருளை தயாரித்த குற்றச்சாட்டில் சிக்கியுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் அறிவியல் மையத்தில் இரசாயன நெடி ஏற்பட்டதைத் தொடர்ந்து, விசாரணையில் இவர்கள் இருவரும் போதைப்பொருள் தயாரித்தமை கண்டறியப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



மெத்தம்ஃபெட்டமைன் போதைப்பொருள் தயாரித்தால் 40 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட வாய்ப்பிருப்பதாக அமெரிக்க சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir



# ஒன்றையுமே பெற்றுக் கொடுக்காமல் பிரபாகரன் உயிரிழந்தமையில் எந்தப் பெருமையும் இல்லை

## இப்படிக் கூறுகின்றார் முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாள்



பிரபாகரன்ஒன்றையும் பெற்றுக் கொடுக்காது உயிரிழந்ததில் எந்த பெருமையும் கிடையாது என இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜ பெருமாள. தெரிவித்துள்ளார்

இந்திய முன்னாள் பிரதமர் வி.பி.சிங் மற்றும் தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி ஆகியோரினாலேயே இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது போனதாக வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவிக்கின்றார்.

இலங்கையில் மாகாண சபைகளை உருவாக்க இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி பாரிய ஒத்துழைப்புக்களை வழங்கிய போதிலும், அவருக்கு பின் ஆட்சிக்கு வந்த வி.பி.சிங் அதற்கு தடையாக செயற்பட்டார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, இலங்கையில் 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமைக்கு தான் ஒருபோதும் இந்தியாவை குறைக்கூற போவதில்லை என தெரிவித்த வரதராஜப்பெருமாள், வி.பி.சிங் மற்றும் கருணாநிதி ஆகியோரையே தான் குறைகூறுகிறார் எனவும் தெரிவித்தார்.



இலங்கையுடன் ராஜீவ் காந்தி ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு, ராஜீவ் காந்தி வைத்த கையொப்பத்தை, வி.பி.சிங் மதிக்காது போனார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.


தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ மற்றும் விடுதலைப் புலிகள் இணைவதற்கும் ஆதரவாக செயற்பட்டாரே தவிர, ஈழத் தமிழர்கள் விடயத்தில் அவர் அந்தச் சந்தர்ப்பத்தில் அக்கறையுடன் செயற்படவில்லை என அவர் கூறினார்.

சிங்களத் தலைவர்கள், இந்திய மத்திய அரசாங்கம், தமிழக அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோர் இணைந்து செயற்பட்ட நிலையிலேயே, தனக்கு வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபையை நடத்திச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாக அவர் கூறுகின்றார்.

இந்த நிலையில், ஒற்றை ஆட்சிக்குள் அதிகார பகிர்வு என்ற விடயம் உள்ளடங்கலாக தாம் அந்த சந்தர்ப்பத்தில் 19 அம்சக் கோரிக்கைகளை சிங்களத் தலைவர்களிடம் முன்வைத்த போதிலும், அவர்கள் அதனை புறக்கணித்தனர் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள், கருணாநிதி மற்றும் சிங்களத் தலைவர்கள் ஒன்றாக இணைந்து சரியாக செயற்பட்டிருக்கும் பட்சத்தில், 1990ஆம் ஆண்டு காலத்திற்கு பிறகு இடம்பெற்ற பாரிய அழிவைத் தடுத்து நிறுத்தியிருக்கக் கூடும் என வரதராஜாப்பெருமாள் கூறுகின்றார்.

1990ஆம் ஆண்டே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்திருக்கும் பட்சத்தில், அதிகாரம் மிக்க மாகாண சபை முறைமையை பெற்றிருக்க முடியும் எனவும், பாரிய அழிவுகளைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



வடக்கு,கிழக்கு மாகாண சபையைக் கலைக்கும் நோக்குடன் வரதராஜப்பெருமாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடியை ஏற்றினார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் அவரிடம் வினவப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தான் எதிரானவர் என்ற நிலையில், எவ்வாறு அவர்களின் கொடியைத் தான் ஏற்றியிருக்க முடியும் என அவர் எதிர்க்கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாண சபையின் உத்தியோகப்பூர்வமான கொடியாக காணப்படுகின்ற கொடியே, வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கொடியாக அப்போது காணப்பட்டதாகவும், அந்தக் கொடியையே தான் ஏற்றினார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்த இந்தியா ஒருபோதும் ஆதரவு வழங்கவில்லை என வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜ பெருமாள் தெரிவிக்கின்றார்.

இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி போன்றோர் இலங்கை பிரிவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்திற்கு இந்தியா ஆயுதங்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்குவதாக கூறப்படும் கருத்தை முற்றாக நிராகரித்த வரதராஜப்பெருமாள், இலங்கை தரப்பினரே இந்தியாவிடம் சென்று பயிற்சிகளை பெற்று வந்தனர் எனவும் அவர் நினைவூட்டினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தானும் உயிரிழந்து, தன்னுடன் சார்ந்தவர்களையும் பலிகொடுத்து, தமிழ் மக்களின் உயிர்களையும் பலியாக்கி, தமிழர்களுக்கு ஒன்றையும் பெற்றுக் கொடுக்காது உயிரிழந்தமையில் எந்தவித பெருமையும் கிடையாது எனவும் வராஜப்பெருமாள் தெரிவிக்கின்றார்.





யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக இந்தியாவில் அடைக்கலம் புகுந்த உங்களை, உங்கள் மக்கள் எவ்வாறு நம்புவது என்ற கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தலைவன் என்பவன் மக்களுக்காகக் கடமையைப் பொறுப்பேற்றுச் செய்பவனே தவிர, அதனைத் தவறவிடுபவன் அல்லன் எனவும் அவர் கூறினார்.

தான் தமிழ் மக்களுக்காகக் கையில் எடுத்த பொறுப்பை நிறைவேற்றவே இந்த மண்ணில் வாழ்ந்து வருகிறார் எனவும், அதற்கான முயற்சிகளையே தான் முன்னெடுத்து வருகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண மக்களில் பெரும்பான்மையினரின் விருப்பத்தை வெற்றி கொள்ளுவோமாக இருந்தால், வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் சாத்தியம் காணப்படுவதாக வரதராஜப்பெருமாள் நம்பிக்கை வெளியிடுகின்றார்.



வடக்கு, கிழக்கு நீதிமன்றத்தினால் பிரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், அதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சட்டரீதியாக நடவடிக்கைகளை எடுக்க தவறியுள்ளாகவும் அவர் குற்றஞ்சுமத்தினார்.

மாகாண சபை அதிகாரங்கள் வெற்றிக் கொள்ளப்பட்டு, மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கத்திற்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தினால் அதிகாரங்கள் பெரும்பாலும் கிடைத்து விடும் என அவர் நம்பிக்கை வெளியிடுகின்றார்.

அதைவிடுத்து, அதிகாரங்கள் அனைத்தையும் ஒரே தடவையில் வெற்றிக் கொள்வது என்பது சிரமமான விடயம் என வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கூறுகின்றார்.

நன்றி:- இலக்கியா

# பிளவுபட்டுள்ள இரு தேசங்களையும் ஒன்றிணைக்க முயற்சி செய்யுங்கள்!

## கோட்டாபயவிடம் சிவில் சமூக அமைப்பு கோரிக்கை

சிறுபான்மை மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வழங்கி – ஜனநாயக ரீதியில் பிளவுபட்டு நிற்கும் இரண்டு தேசங்களையும் ஒன்றாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவிடம் வடக்கு – கிழக்கு சிவில் சமூக அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

இலங்கையின் ஏழாவது ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு தமிழர்களாகிய நாம் மீண்டும் ஒரு வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தியுள்ளோம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு தமிழ் மக்கள் இலங்கையின் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமக்கான உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர்.

இலங்கையின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு உரித்துடைய தனியான இனக் குழுமம் என்ற அடிப்படையில் இலங்கையில் தனியான தாயகம், மொழி, பண்பாடு, கலாசார வரலாற்றைக் கொண்ட இனம் என்ற அடிப்படையில் நடந்து முடிந்த ஏழாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆகிய நாம் எமது தனித்துவத்தை மேலும் நிரூபித்துள்ளோம். எழுபது ஆண்டுகளைக் கடந்தும் தமிழர் தேசம் மீண்டும் தனது தனித்துவத்துடன் தனியாக நிமிர்ந்து நிற்கிறது.

அகிம்சைப் போராட்டக் காலத்திலும், ஆயுதப் போராட்ட காலத்திலும் தமிழ் மக்கள் எந்த நிலைப்பாட்டை எடுத்தார்களோ அதே நிலைப்பாட்டை யுத்தம் நிறைவடைந்து பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் கையில் எடுத்து பயணிக்கின்றனர். நடந்தது முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு – கிழக்கு தமிழர்கள் தங்களது உரிமைக்காக மீண்டும் தன்னெழுச்சியாக ஒன்றுபட்டு நிற்கின்றனர். இதன் ஊடாக தமிழர் தேசம் சிங்கள தேசத்துக்கு மீண்டும் மீண்டும் தங்களது சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை பறைசாற்றியுள்ளது. தமிழர்கள் இலங்கை பூமிப்பந்தில் தங்களது வாக்குகளைக் கொண்டு ஜனநாயக ரீதியில் ஒரு வரைபடத்தை மீண்டும் உருவாக்கி காட்டியுள்ளனர்.

இதன் ஊடாக தமிழ் மக்கள் இந்த நாட்டில் கோரி நிற்பது அபிவிருத்தியையோ அல்லது சலுகைகளையோ அல்ல. சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய அதிகாரப் பகிர்வையே வேண்டி நிற்கின்றனர் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப்படும் இலங்கை நாடு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காது எந்தவித நிரந்தர அபிவிருத்தியையோ நல்லிணக்கத்தையோ கட்டியெழுப்ப முடியாது.

இந்த நாட்டில் தமிழ் மக்களின் உயிர் பலிகளும் தியாகங்களும் மதிக்கப்பட்டு அவர்களது தாயக பூமியில் அவர்கள் முழு அதிகாரம் கொண்ட மக்களாக ஒருமித்த நாட்டுக்குள் வாழ்வதற்கு பதவி ஏற்கும் அரசாங்கம் வழிவகைகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

வடக்கு – கிழக்கு தமிழர் தேசத்துக்கு தனது நேசக்கரத்தை நீட்டி இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வை காண முன்வர வேண்டும்.

எனவே இந்த தேர்தலில் தமிழ் மக்களின் முடிவை முடிந்த முடிவாக எடுத்து இலங்கை அரசும் சர்வதேச நாடுகளும் சிறுபான்மை இன மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும் அல்லது கடந்த அரசு ஆரம்பித்துள்ள அரசியல் யாப்பு சீர்திருத்த பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அதனூடாக சிறுபான்மை மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வழங்கி ஜனநாயக ரீதியில் பிளவுபட்டு நிற்கும் இரண்டு தேசங்களையும் ஒன்றாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கையில் புதிதாக பதவி ஏற்கவுள்ள ஜனாதிபதி அவர்களிடம் இந்த கோரிக்கைகளை முன்வைக்கின்றோம் – என்றுள்ளது.

# தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கே மலையக மக்கள் அமோக ஆதரவு

## வேலுகுமார் எம்.பி. அறிக்கை



கொழும்பு, நவ. 19

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம் எடுத்த முடிவு சரியானது என்பதையே தமிழ் மக்கள் வழங்கியுள்ள பேராதரவு உறுதிப்படுத்துகின்றது. எனவே, இத்தேர்தலில் நாம் ஆதரித்த அணி, பின்னடைவைச் சந்தித்திருந்தாலும் எமக்கான மக்கள் பலத்தில் – ஆதரவில் – எவ்வித வீழ்ச்சியும் ஏற்படவில்லை. – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் என்ற முதல் சுற்றில் தற்காலிக பின்னடைவு ஏற்பட்டிருந்தாலும் நாடாளுமன்றத் தேர்தல் என்ற 2 ஆம் சுற்றில் மீண்டெழுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அந்த வாய்ப்பை உரிய வகையில் பயன்படுத்திக்கொள்வது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் பங்காளிகளும் சிந்தித்துச் சிறப்பான அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி அலுவலகத்தில் அந்த மாவட்ட கட்சி செயற்பாட்டாளர்களுடன் நேற்று முற்பகல் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய வேலுகுமார் எம்.பி. மேலும் கூறியதாவது,

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் பேசும் மக்கள் பேராதரவை வழங்கியிருந்தனர்.

வடக்கு, கிழக்கிலுள்ள 5 தேர்தல் மாவட்டங்களிலும் சஜித்தே வெற்றிபெற்றிருந்தார். நுவரெலியா மாவட்டத்திலும் முன்னிலை வகித்தார். அதேபோல் கண்டி மாவட்டத்திலும் 44.46 சதவீத வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

கண்டி மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் இம்முறை மிகவும் ஆர்வத்துடன் வாக்களித்தனர். மொத்த வாக்களிப்பு வீதமானது 84.89 ஆக பதிவானது. இதன்காரணமாகவே நாவலப்பிட்டிய, கம்பளை, ஹேவாஹெட்ட, கண்டி, பாததும்பர ஆகிய தேர்தல் தொகுதிகளை எம்மால் கைப்பற்றக்கூடியதாக இருந்தது.

ஆகவே, என் மீது நம்பிக்கைவைத்து அன்னத்துக்கு வாக்களித்த மக்களுக்கு இத்தருணத்தில் நன்றிகூற கடமைபட்டுள்ளதுடன், மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் அரசியல் பயணத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டிய கடப்பாடும் எனக்கிருக்கின்றது.

கடந்த உள்ளாட்சிசபைத் தேர்தலின்போது கண்டி மாவட்டத்தில் ஏணி சின்னத்தில் தனித்து போட்டியிட்டு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுத்து எமது பலத்தை நிரூபித்தோம். இம்முறை ஜனாதிபதி தேர்தலிலும் அதனை செய்துகாட்டியுள்ளோம். எனவே, நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பயணம் தொடரும்.

அதேபோல் ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான கூட்டணிக்கு ஏற்பட்ட இந்த தோல்வியானது தற்காலிக பின்னடைவாகும். எங்கு தவறிழைக்கப்பட்டுள்ளது என்பதை முதலில் ஆராயவேண்டும். பலவீனங்களைக் கண்டறிந்து அவை நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

இவ்வாறு உரிய வகையில் தயாராகி நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டால் நிச்சயம் வெற்றிபெறலாம். இதனைவிடுத்து கட்சி அரசியலையும், நபர்களையும் முன்னிலைப்படுத்தி செயற்பட்டால் மீண்டெழ முடியாத நிலைஏற்படும்.

அதேவேளை, இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதுடன், இன, மத, குல, கட்சி பேதங்களுக்கு அப்பால் இலங்கையில் வாழும் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

# கோட்டாபயவை சந்தித்தார் இந்தியத் தூதுவர் தரன்ஜித்

கொழும்பு, நவ. 19

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டமையை அடுத்து, இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து நேற்றுமுன்தினம் மாலை அவரைச் சந்தித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவை, நுகேகோட மீரிஹானவில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று இந்தியத் தூதுவர் சந்தித்திருந்தார்.

இந்தியத் தூதுவருடனான சந்திப்பிக் முக்கியத்துவம் என்ன என்று ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த கோட்டாபய ராஜபக்ஷ, சாதாரணமாகச் சந்தித்தேன் என்று மாத்திரம் குறிப்பிட்டார்.

இந்தியா, சீனாவுடனான உறவுகளுக்கு இலங்கை எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த கோட்டாபய, மிகவும் முக்கியம், இந்தியாவும் சீனாவும், எமது அயல் நாடுகள், எப்போதும் எமது நீண்டகால நண்பர்களாகவும் உள்ளன என்று குறிப்பிட்டார்.

யாருக்கு கூடுதல் முக்கியத்துவம் என்று எழுப்பிய கேள்விக்கு அவர், இரண்டுமே முக்கியமானவைதான். எல்லா நாடுகளும் முக்கியம்தான். ஆனால் இந்தியா எமது அயல் நாடு என்று பதிலளித்தார்.

சீனா பற்றி என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கோட்டாபய ராஜபக்ஷ, சீனா பொருளாதாரப் பங்காளி என்று குறிப்பிட்டார். (ஐ)

northern PC PARK

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

காலைக்கதிர் Kalaikathir



# பட்டின்சனுக்கு தடை!



கோபம் அடைந்தமையினால் எதிரணி வீரரை திட்டிய ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சனுக்கு ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜேம்ஸ்பட்டின்சன், உள்ளூர்ப் போட்டியின்போது குயின்ஸ்லாந்து வீரரைச் சரமாரியாகத் திட்டினார். இதுபற்றி நடுவர்கள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். இதையடுத்து அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, ஒரு சர்வதேசப் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இதனால் எதிர்வரும் 21 ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் அவர் விளையாடமாட்டார். அவருக்குப் பதிலாக ஸ்டார்க் சேர்க்கப்படுகிறார்.

இதையடுத்து பிரிஸ்பேனில் வீரர்களுடன் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அவர், தனது சொந்த ஊரான விக்டோரியாவுக்குத் திரும்பினார்.

அடிலெய்டில், பாகிஸ்தானுக்கு எதிராக எதிர்வரும் 29 ஆம் திகதி நடக்கும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் பட்டின்சன் பங்கேற்பார்.

# ரி – 20 தொடரை வென்றது ஆப்கானிஸ்தான் அணி!



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி – 20 போட்டியில், ஆப்கானிஸ்தான் அணி, 29 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரை, 2 – 1 என்ற கணக்கில் வெற்றிக் கொண்டது.

லக்னொவ் மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, முதல் ஓவரிலேயே தனது முதல் விக்கெட்டை இழந்தது

அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ஹஸ்ரதுல்லா சஸாய் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய கரீம் ஜெனட்டும் 2 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

இதன்பிறகு களமிறங்கிய இப்ராஹிம் சத்ரான் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய அஸ்கர் ஆப்கான், மற்றொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ராமனுல்லா குர்பாஸ்சுடன் ஜோடி சேர்ந்து 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துக் கொண்டார்.

இதனையடுத்து இப்ராஹிம் சத்ரான் 24 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, சிறப்பாக துடுப்பெடுத்தாடி வந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ராமனுல்லா குர்பாஸ் 79 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இதனைத் தொடர்ந்து, நஜிபுல்லா சத்ரான் 14 ஓட்டங்களுடனும், மொஹமட் நபி 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினார். அணித்தலைவர் ரஷித் கான் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தார்.

குல்பதீன் நய்ப் 4 ஓட்டங்களுடனும், நவீன் உல் ஹக் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருக்க, ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 156 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சில், செல்டோன் கொட்ரெல், கெஸ்ரிக் வில்லியம்ஸ், கீமோ போல் ஆகியோர் தலா 2 ஓட்டங்களையும், கிரன் பொலார்ட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 157 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, ஆரம்பமே சற்று தடுமாற்றத்தை எதிர்கொண்டது.

அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான லெண்ட்ல் சிமெண்ஸ் 7 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய பிரெண்டன் கிங், 1 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர்.

அடுத்து ஆரம்ப துடுப்பாட்ட வீரரான எவின் லிவீஸ் 24 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, அதன்பிறகு களமிறங்கிய எந்த வீரர்களும் அணிக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கவில்லை.

சிம்ரொன் ஹெட்மியர் மற்றும் கிரன் பொலார்ட் ஆகியோர் தலா 11 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேற, ஜேசன் ஹோல்டர் 6 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். இதன்பிறகு சிறப்பாக துடுப்பெடுத்தாடி வந்த சாய் ஹோப் 52 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

கீமோ போல் 4 ஓட்டங்களுடனும், கெரி பியர் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருக்க மேற்கிந்தியத் தீவுகள் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 127 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் ஆப்கானிஸ்தான் அணி, 29 ஓட்டங்களால் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், நவீன் உல் ஹக் 3 விக்கெட்டுகளையும், முஜிப் உர் ரஹ்மான், கரிம் ஜெனட், குல்பதீன் நய்ப் மற்றும் ரஷித் கான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ராமனுல்லா குர்பாஸ் தெரிவு செய்யப்பட்டமையோடு, தொடரின் நாயகனாக கரிம் ஜெனட் தெரிவு செய்யப்பட்டார்.

ஆப்கானிஸ்தான் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடர் மற்றும் ஒரேயொரு ரி – 20 போட்டியில் விளையாடுகின்றது.

இதில் முதலாவதாக நடைபெற்ற ஒருநாள் தொடரை, மேற்கிந்திய தீவுகள் அணி முழுமையாக கைப்பற்றியது. தற்போது, ரி – 20 தொடரை ஆப்கானிஸ்தான் அணி 2 – 1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

இறுதியாக இரு அணிகளுக்கிடையிலான ஒரேயொரு டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 27ஆம் திகதி லக்னொவ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## எங்களுக்கு அமைதி வேண்டும்!

## கோட்டாவிடம் கோரிய ரஸல் ஆர்னல்ட்



எங்களுக்கு அமைதி மற்றும் வளர்ச்சி தான் வேண்டும் எனவும் அதை நீங்கள் கொடுப்பீர்கள் எனத் தாம் நம்புகிறார் எனவும் கோட்டாபயவுக்கு தனது டுவிட்டர் பதிவின் மூலம் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரஸல் ஆர்னல்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தமிழ் வீரரான ஆர்னல்ட் தனது டுவிட்டர் பதிவில், கோட்டாபயவுக்கு வாழ்த்துக்கள். ஒற்றுமை, அமைதி, வளர்ச்சி இது தான் நம் எல்லோருக்கும் தேவைப்படுகிறது.

அதை நோக்கி நீங்கள் எங்களைக் கொண்டு செல்வீர்கள் என நம்புகிறோம். உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.- என பதிவிட்டுள்ளார்.

இந்தப் பதிவை கோட்டாபயவுடன் சேர்ந்து நாமல் டுவிட்டர் ஐடிக்கும் ஆர்னல்ட் இணைப்புச் செய்துள்ளார்.



# முதல்முறை சம்பியன் ஏந்தினார் ஸிட்ஸிபாஸ்!

ரென்னிஸ் வீரர்களுக்கு மிக முக்கியமான தொடராகப் பார்க்கப்படும் ஏ.டி.பி பைனல்ஸ் தொடர் இனிதே நிறைவுப் பெற்றுள்ளது.

எதிர்பார்ப்பு மிக்க இறுதிப் போட்டிக்கு உலகின் ஆறாம் நிலை வீரரான கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ்சும், உலகின் ஐந்தாம் நிலை வீரரான டோமினிக் தியேமும் பலப்பரீட்சை நடத்தினர்.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை ஏற்படுத்திய இப்போட்டியில், முதல் செற்றே இரசிகர்களுக்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

டை பிரேக் வரை நகர்ந்த இந்தப் போட்டியில், டோமினிக் தியேம் கடுமையாக போராடி 7 – 6 என செற்றைக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து, ஆக்ரோமாக மீண்டெழுந்த ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ், செற்றை 6 – 2 என எளிதாக கைப்பற்றினார்.

இருவரும் தலா ஒரு செற்றைக் கைப்பற்றியதால், வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செற் எதிர்பார்ப்பை எகிற வைத்தது.

இதில், இருவரும் விட்டுக் கொடுக்காமல் விளையாட இந்த செற்றும் டை பிரேக் வரை நகர்ந்தது. இந்த செட்டில், இறுதிவரை போராடிய ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ், செற்றை 7 – 6 எனக் கைப்பற்றிச் சம்பியன் பட்டத்தை வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் இத்தொடரில் முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்ற ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ், சம்பியனுக்காக வழங்கப்படும் 9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணப்பரிசினையும் பெற்றுக் கொண்டார். (ஐ)

# ஜனாதிபதி இலச்சினையை வெளியிட்டார் கோட்டாபய

## அரச அலுவலகங்களில் தனது படத்தை பயன்படுத்த வேண்டாமெனவும் பணிப்பு



கொழும்பு, நவ. 19

ஜனாதிபதியாக நேற்றுப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷ தனது அதிகாரபூர்வ இலச்சினையை வெளியிட்டுள்ளார்.

அரச அலுவலகங்களில் இனிமேல் தனது படங்களைப் பயன்படுத்தவேண்டாம் என்றும் தனது அதிகாரபூர்வ இலச்சினையைப் பயன்படுத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன் நான்கு மூலைகளும் பௌத்தம் மற்றும் தேசத்தின் செல்வாக்கைக் குறிக்கின்றன. இது மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய உத்தனா சம்பதா , ஆரக்கா சம்பதா , கல்யாண சம்பதா மற்றும் சாம ஜீவிதா ஆகிய நான்கு பௌத்த சிந்தனைகளை சித்திரிக்கிறது.

நான்கு மூலைகளிலும் உள்ள நான்கு குறியீடுகள் சர்வதேச உறவுகளையும் விருந்தோம்பலையும் குறிக்கின்றன. ஒரேஞ் நிறம் தமிழ் மக்களையும் பச்சை நிறம் முஸ்லிம் சமூகத்தையும் குறிக்கிறது.

நான்கு அடி அகலமுள்ள வெள்ளைக் கோடுகள் அனைத்து திசைகளின் பாதுகாப்பையும் குறிக்கின்றன.

சமமாக உள்ள மஞ்சள் துண்டு ஒற்றுமையையும், இன நல்லிணக்கத்தின் ஒற்றுமையையும் குறிக்கிறது. மஞ்சள் என்பது வாழ்க்கையின் உயிர்ச்சக்தியைக் குறிக்கிறது. தூய்மையான வெண் தாமரையை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கொடி, ஊழல் அற்ற ஆட்சியை சுட்டிக்காட்டுவதாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கோட்டாபயவுடன் இணைந்து பணியாற்ற அமெ. விருப்பம்!

கொழும்பு, நவ. 19

இலங்கை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்த்திருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவு ஒன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

ஒரு வலுவான, இறையாண்மை கொண்ட இலங்கைக்காக, நல்லாட்சி, பொருளாதார வளர்ச்சி, மனித உரிமைகளின் முன்னேற்றம் மற்றும் நல்லிணக்கம் போன்ற பிரச்சினைகளில், ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம்.

ஜனநாயக ரீதியான தேர்தலை எதிர்கொண்ட இலங்கை மக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம் என்று அவர் அதில் கூறியுள்ளார். (ஐ)

# தலவாக்கலை நகரில் பெரும் கொண்டாட்டம்!



கொழும்பு, நவ. 19

புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவி பிரமாணம் செய்து கொண்டார்.

இதனையடுத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் அதை மிகவும் பிரமாண்டமான முறையில் கொண்டாடி வருகின்றனர்.

மலையகத்தில் தலவாக்கலை நகரிலும் பட்டாசு கொளுத்தி பெரும் ஆராவாரம் செய்யப்பட்டது.

அவர்கள் புதிய ஜனாதிபதியான கோட்டபாயவின் உருவ படங்களை ஏந்தி கோஷமிட்டுக் கொண்டாடினார்கள். வழமைக்கு மாறாக தலவாக்கலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ஐ)

# எதிர்பார்த்த வாக்குகளை எமது கட்சி பெறவில்லை

## அநுரகுமார கூறுகின்றார்

கொழும்பு, நவ. 19

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி எதிர்பார்த்த வாக்குகளை பெறவில்லை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடு முழுவதும் வெளியான தேர்தல் முடிவுகளின்படி, பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ 6,924,255 வாக்குகளை பெற்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை புதிய ஜனநாயக முன்னணியின் சார்பாக போட்டியிட்ட சஜித் பிரேமதாஸ, 5,564,239 (41.99%) வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதேவேளை தேசிய மக்கள் சக்தியின் சார்பாக போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க 418,553 (3.16%) வாக்குகளை பெற்றிருந்தார்.

இந்நிலையில், தேர்தல் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# புதிய அரசியல் கூட்டணி அமைக்கும் சஜித் தரப்பு!

கொழும்பு, நவ. 19

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து முக்கிய பொறுப்புக்களையும் அமைச்சுக்களையும் விட்டு விலகியுள்ள சஜித் ஆதரவு அமைச்சர்கள் தனியே புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைக்கப் பேச்சு நடத்தி வருகின்றனர்.

பிரதமர் பதவியில் இருந்தும் கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் ரணில் விலகவேண்டுமென இவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இந்தப் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் உட்கட்சி நெருக்கடியை சந்தித்துள்ளது. (ஐ)

# கோட்டா பதவியேற்ற மகிழ்ச்சியில் யாழ்ப்பாணத்திலும் பாற்சோறு!






யாழ்ப்பாணம், நவ. 19

இலங்கையின் 7ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பதவியேற்ற நேரத்தில் யாழ். நகரத்தில் சில இளைஞர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக வெடிகொளுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டமையுடன், பாற்சோறும் வழங்கினர்.

இம்முறை தேர்தலில் சிறுபான்மையினர் மிகச்சொற்பமான வாக்குகளையே கோட்டாபயவுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

# வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் படுகொலை நினைவு









வவுனியா, நவ. 19

கடந்த 2006 ஆம் ஆண்டு வவுனியா விவசாயக் கல்லூரி வளாகத்தில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவு தினம் வவுனியா விவசாயக் கல்லூரியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கல்லூரியின் மாணவர் ஒன்றியத்தால் அனுஸ்டிக்கப்பட்ட இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் திருவுருவ படங்களுக்கு நினைவுச் சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவாக இரத்ததான நிகழ்வு ஒன்று விவசாயக் கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட்டதுடன், அவர்களின் நினைவாக மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் சங்கரலிங்கம் கிந்துஜன், சித்திரவேல் கோபிநாத், இராமச்சந்திரன் அச்சுதன், சித்திக்காசன் றிஸ்வான்,சுந்தரலிங்கம் ஜங்கரன், திருநாமம் சிந்துஜன் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மன்னாரில் கோட்டாவுக்கு வெற்றிக் கொண்டாட்டம்





மன்னார், நவ. 19

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையை மன்னார் மாவட்டத்தில் உள்ள ஆத ரவாளர்கள் நேற்று மதியம் மன்னார் பஸார் பகுதியில் பாற்சோறுவழங்கிகொண்டாடினார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், மன்னார் நகர சபை உறுப்பினருமான செல்வக்குமரன் டிலான் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பஸார் பகுதியில் பட்டாசு கொழுத்தி மக்களுக்கு பாற்சோறு வழங்கி அவர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# ஐ.தே.கவை முழுமையாக மறுசீரமைக்கவேண்டும்!

## சரத் பொன்சேகா கோரிக்கை



கொழும்பு, நவ. 19

தற்போதைய சூழ்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாக மறுசீரமைக்க வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கட்சித் தலைமைகளின் அணுகுமுறை மாறவேண்டுமெனவும், மக்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு அதனடிப்படையில் கட்சியை மறுசீரமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.(ஐ)

# கோட்டாவை வாழ்த்திய ரிஷாத்

கொழும்பு, நவ. 19

புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வாழ்த்து தெரிவித்துள்ளது.

அத்தோடு ஜனாதிபதி தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் சஜித் பிரமேதாஸவுக்கு ஆதரவளித்து, வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக அந்தக் கட்சியின் தரைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய ஜனாதிபதி சகல இனங்களுக்கிடையிலும் சமாதானம், ஐக்கியம், சகோதரத்துவம், நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு ஆகியன நிலைகொள்ளும் வகையில் செயற்படுவாரென நம்புகின்றோம்.

நமது நாடென்றவகையில் இன ஐக்கியத்துடனும் சகோதர மனப்பாங்குடனும் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு நாட்டை அபிவிருத்தியின் பால் இட்டுச்செல்ல புதிய ஜனாதிபதிக்கு வலிமையும் மனோதைரியமும் கிடைக்கவேண்டுமென பிரார்த்திக்கின்றேன் – என்றார்.

# கோட்டாபயவுக்கு சம்பந்தன் வாழ்த்து

*கொழும்பு, நவ. 19*

*7ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி அவர் வாழ்த்து தெரிவித்தார்.*

*இந்தத் தொலைப்பேசி உரையாடலின்போது, நேற்று பதவியேற்கிறேன் எனக் கோட்டாபய கூறினார் என்றும், ஆனாலும் அந்த நிகழ்வுக்கு வரவேண்டுமென அவர் சம்பந்தனை அழைக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.*

*இதேவேளை, பொதுஜன பெரமுனதரப்பினர்,சிறுபான்மையினக்கட்சிகள்கோட்டாபயவின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டுமென விசேட அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# மஹிந்தவின் சேவை நாட்டுக்குத் தேவை!

## புதிய ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு



கொழும்பு, நவ. 19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சேவையை மீண்டும் நாடு கோருவதற்கான நேரம் இதுவென புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை தனது பிறந்தநாளைக் கொண்டாடினார். இந்நிலையில் அவருக்கு அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் எனப் பலரும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்நிலையில் கோட்டாபயவும் மஹிந்தவுக்கு வாழ்த்து செய்தியொன்றை அனுப்பியுள்ளார். அதில் பிறந்தநாளை முன்னிட்டு வாழ்த்துகிறேன் எனவும் நாடு மீண்டும் தங்களின் சேவையைக் கோரியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)